SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special

SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 21. TML1160 - தொல்காப்பியப் புறத்திணையியலில் பெண்கள்: காஞ்சித்திணையும் தனியுடைமைச் சமூகமும்

முனைவர் த. திருப்பதி
உதவிப்பேராசிரியர் (சுழற்சி 2)
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635 601

*தொல்காப்பியம் பழந்தமிழரின் இலக்கியக் கொள்கைகளைச் சுமந்துகொண்டுள்ள ஆவணமாக உள்ளது. அதனை இலக்கண, இலக்கிய நுலாகவும், வாழ்வியல் நூலாகவும், வரலாற்று நூலாகவும், கவிதையியல் நூலாகவும் கருதி தமது ஆய்வினை ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். வாழ்வியல் நூலாக அதனை முழுவதும் கொள்ள இயலாவிட்டாலும் அதன் கவிதையாக்கக் கொள்கைகள், தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் நிலவிய சமூகத்தையும் அது இலட்சியப்படுத்த நினைக்கின்ற அமைப்பினையும் அறிய ஏதுவானதாக உள்ளது. இலக்கியம் தான்சார்ந்த சமூகத்தின் உற்பத்திப்பொருள் எனும் மார்க்சியத்தின் அடிப்படையின்று ஆராயும்போது அவற்றை அறிய இயலும். அவ் விதத்தில் இக்கட்டுரையானது தொல்காப்பியப் புறத்திணையியலில் இடம்பெற்றுள்ள பெண்கள் சார்ந்த பதிவுகளைக் கொண்டு அன்றைக்கு நிலவிய சமூகநிலையினை மார்க்சிய அணுகுமுறையில் ஆராய்கிறது.*

## தொல்காப்பியப் புறத்திணையும் காஞ்சித்திணையும்

*தொல்காப்பியப் பொருளதிகாரம் ‘அகம்‘, ‘புறம்‘ என்கிற பகுப்பை முன்வைக்கிறது. அதில் ‘அகம்‘ என்பது ‘அகத்திணை’, ‘களவியல்’, ‘கற்பியல்’ உள்ளிட்ட இயல்களின் வழியாகக் காதல், பாலுறவு, திருமணம் உள்ளிட்டவைபற்றிய இலக்கிய ஆக்கங்களைப் பேசுகிறது. புறமானது புறத்திணையியல் எனும் இயலின் வழியாகப் போர் நிகழ்வுகளையும் அவற்றைப் பாடும்முறைகளை எடுத்துரைப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. அகம் சார்ந்த இடங்களில் பெண் பாத்திரங்களுக்குத் தரப்பட்டிருக்கும் இடம் புறத்தில் இல்லை. புறம் முழுமையும் ஆண்மையப்பட்டதாக உள்ளது. தொல்காப்பியப் புறத்திணை ஏழுவகையான திணைகளைப் பேசுகிறது. அத்திணைகளில் எங்கேனும் பெண்கள் பற்றிய பதிவுகள் உள்ளனவா? என ஆராய்கின்றபோது அதில் காஞ்சித்திணையில் மட்டும் பெண்பாத்திர அமைப்புகள் பேசப்பட்டுள்ளன. ஏனைய துறைகளில் பெண்பாற்பதிவுகள் காணப்படவில்லை. அதற்கான இலக்கிய மற்றும் சமூகவியல் காரணங்கள் விரிவாக ஆராயத்தக்கன. காஞ்சித்திணைக்குறித்துத் தொல்காப்பியம்*

“காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே” (தொல். பொருள். நூ. 77 –78)

*எனும் நூற்பாவின் வழியாக எடுத்துரைக்கிறது.*

*‘தமக்குத் துணை என்று கருதுவன எவையும் நிலையில்லாதது உலகம். அத்தகைய நிலையில்லாத தன்மையினை எடுத்துரைப்பது காஞ்சித்திணையாகும். பெருவழக்காகிய திணை பெருந்திணை. அது எந்திலத்திற்கும் உரியது. எல்லாவிதமான போரின் இறுதியிலும் அழிவுகளினால் ஏற்படும் நிலையாமை பொதுவானது என்பதனால் உரிப்பொருளை மையமிட்டுக் காஞ்சியைப் பெருந்திணைக்குப் புறன்’ என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதை அறிய முடிகிறது.*

*இனக்குழு அழிந்து அரசு சமூகம் தோன்றிய வளர்ந்த காலத்தில், தனிச்சொத்தினைப் பெருக்க சமூகத்தில் ஏராளமான போர்கள் நிகழ்வது தேவை. ஆதிச்சமூகத்தில் உணவிற்காக மட்டுமே நிகழ்ந்த சிறு சிறு சண்டைகள் பின்னர் மனித மாண்புகள் சீர்குலைந்த, அதிகாரமொன்றையே இலக்காக்கிய பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டுமே நடைபெறுவதாக மாறின. தொடர்ப்போர்களினால் சமூகம்*

*பெருந்துன்பங்களுக்கு ஆட்பட்டது. இதன் பிரதிபலிப்பாகச் சமூகத்தில் 'துறவு', 'நிலையாமை' பற்றிய கருத்தாக்கங்கள் உருவாகி இருக்கலாம். அத்தகைய தொடக்ககால நிலையாமை எனும் கருத்துருவாக்கம் இலக்கியங்களில் பயின்றுவந்துள்ள முறைமையினை எடுத்துரைப்பதாகத் தொல்காப்பியம் காஞ் சித்திணையைக் காட்டுகிறது. காஞ்சித்திணை இருபது துறைகளைக் கொண்டிருப்பதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.*

**காஞ்சித்திணையின் துறைகள்**

*காஞ்சித்திணையின் துறைகளாகப் பின்வருவனவற்றைத் தொல்காப்பியம் காட்டுகிறது.*

''மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியு மறத்தி னானு
மேமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேஎ யோம்பிய பேஎய்ப் பக்கமு
மின்னனென் றிரங்கிய மன்னை யானு
மின்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானு
மின்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பெயர்த்த மனைவி யாஞ்சி யானு
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானு
முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன்
றலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
யீரைந் தாகு மென்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற
மாய்ந்த பூசன் மயக்கத் தானுந்
தாமே யேங்கிய தாங்கரும் பையுளுங்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமு
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையுங்
கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ
யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையுங்
காதலி யிழந்த தபுதார நிலையும்
காதல னிழந்த தாபத நிலையு
நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையு
மாய்பெருஞ் சிறப்பிற் புதல்வன் பெயரத்
தாய்பத வரூஉந் தலைப்பெய னிலையு
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பிற் றுறையிரண் டுடைத்தே'' (தொல். பொருள். புறம். 79)

*மேற்கண்ட காஞ்சித்திணையின் துறைகளைக் காணும்பொழுது அவை*

❖ *மரணத்தின் துன்பத்தினை எடுத்தியம்புகின்றன.*

❖ *நிலையற்ற வாழ்வினை உய்த்துணர வைக்கின்றன.*

❖ *போர்க்களத்தின் வெம்மையினால் மாண்ட வீரர்கள், மன்னர்கள், அவர்தம் மனைவிமார்களின் துன்பங்கள், கணவரின் இறப்பிற்குப்பின்பான மனைவியரின் நிலைகளைப் பற்றி எடுத்துக்காட்டுகின்றன.*

*காஞ்சித்திணை குறிப்பிடும் இருபது துறைகளில் பத்துத் துறைகளில் பெண் பாத்திரங்கள் சுட்டப்படுகின்றன. அதனை ஆராய்வது தொல்காப்பியச் சமூகத்தில் பெண்களின்நிலையினை அவர்கள்பற்றிய கருத்துருவாக்கங்களின் பின்னணியில் அறிந்துகொள்ள பயனுடையதாக இருக்கும்.*

### பெண்கள் குறிப்பிடப்படும் காஞ்சித் துறைகள்

*காஞ்சித்திணையில்: தொடாக்காஞ்சி (7), ஆஞ்சிக்காஞ்சி (8), மகட்பாற்காஞ்சி (9), முதுகாஞ்சி, தலையொடு முடிதல் (10), மூதானந்தம் (13), முதுபாலைக் காஞ்சி (14), தபுதாரநிலையும் (16), தாபதநிலையும் (17), பாலைக்காஞ்சி (18), தலைப்பெயல் நிலை (19) ஆகிய பத்துத்துறைகளில் பெண்கள் குறிப்பிடப்படுகின்றனர்.*

| வ.எ | துறை | விளக்கம் |
|---|---|---|
| 1 | தொடாக்காஞ்சி (7) | இறந்த கணவனது உடலைத் தீண்டாமல் அச்சப்பட்டு நிற்றல். |
| 2 | ஆஞ்சிக்காஞ்சி (8) | தன் கணவன் இறப்பதற்குக் காரணமான வேலினால் தன் உயிரையும் போக்கிக்கொள்வது ஆஞ்சிக்காஞ்சி எனப்படுகிறது. |
| 3 | மகட்பாற்காஞ்சி (9) | முதுகுடியினர் தமது பெண்களை மணம் செய்து கொள்ள வேண்டிக் கேட்டவர்களை மறுத்தல், போர்ப்புரிதல் |
| 4 | முதுகாஞ்சி, தலையொடு முடிதல் (10) | கணவனின் உடலில் இருந்து துண்டிக்கப்பட்ட தலையினை மனைவி தனது மார்பிலும் முகத்திலும் சேர்த்து அணைத்துக்கொண்டு இறப்பது தலைக்காஞ்சி எனப்படுகிறது. |
| 5 | மூதானந்தம் (13) | வழியில் செல்வோர் இறந்த கணவனுடன் அவனது மனைவியும் இறந்திருப்பதைக்கண்டு வருத்தமுற்றுக் கூறுவது |
| 6 | முதுபாலைக் காஞ்சி (14) | வெம்மை மிக்க பாலை நிலத்தில் தனது கணவனை இழந்த மனைவி அழுவது |
| 7 | தபுதாரநிலையும் (16) | மனைவியை இழந்த கணவனின் நிலை |
| 8 | தாபதநிலையும் (17) | கணவனை இழந்த மனைவியின் நிலை |
| 9 | பாலைக்காஞ்சி (18) | உடன்கட்டை ஏறும் பெண்ணைத் தடுத்துநிறுத்திப் பேசுதல் |
| 10 | தலைப்பெயல் நிலை (19) | களத்தில் புறமுதுகிட்டான் தன் மகன் எனக்கேட்ட தாய் அது குறித்து நாணி தான் இறப்பதாகக் கூறுவது. |

**மேற்கண்ட துறைகளைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக்கொள்ளலாம்**

- *மகன் இறந்த செய்தி கேட்டுப் போர்க்களம் செல்லும் தாய்*
- *முதுகுடியினர் தமது மகளை மறுத்தலும் அதனால் ஏற்படும் போரும்*
- *கணவனை இழந்த மகளிரின் நிலைகள்: இறத்தலும், கைம்மை நோன்பும்.*

### தலைப்பெயல்நிலைக்காஞ்சியும் இனக்குழுச்சமூகமும்

*தலைப்பெயல்நிலைக்காஞ்சியானது காஞ்சித்திணையின் பத்தொன்பதாவது துறையாக அமைந்துள்ளது. இதற்கு 'தன்மகன் புறங்கொடுத்தான் என்பதைக் கேட்டு சினமுற்றுப் போர்க்களத்தை நோக்கி வந்த தாய், அவன் புறங்கொடுத்திருப்பின் தானும் அவனுடன் இறப்பேன் என்று கூறி வருவது தலைப்பெயல் நிலையென' நச்சினார்க்கினியார் (ஆ. சிவலிங்கனார், ப.145) விளக்குகிறார்.*

*புறம் 278ஆம் பாடலை இதற்குச் சான்றாக அவர் தருகிறார். அப்பாடலில் 'தனது மகன் புறங்கொடுத்தான் என்கிற செய்தியினை அறிந்து, அவ்வாறு அவன் இறந்திருந்தால் அவன் பாலுண்ட மூலையினை அறுத்தெறிவேன் எனச் சினமுற்றுப் போர்க்களம் சென்ற தாய், அவன் விழுப்புண்பட்டு இறந்திருப்பதைக் கண்டு அவனைப் பெற்றெடுத்தைக் காட்டிலும் பெரிதாய் மகிழ்ந்தாள்' என்பதாக உள்ளது.*

*இத்துறை தாய் மகன் என்கிற உறவுநிலையினை மட்டும் புலப்படுத்துகிறது. இங்குத் தந்தைப்பற்றிய சுட்டல் இல்லை. இது தந்தை முதன்மைப்பெறாத குழுவாழ்வியல் நிலையான தாய்வழிச்சமூகத்தில் இருந்த வீரமகளிரை நினைவுப்படுத்துவதாக அடையாளப்படுத்தலாம்.*

### மகட்பாற்காஞ்சியும் இனக்குழுவின் சிதைவும்

*பெருஞ்செல்வமிருப்பினும் வலிமை வாய்ந்த 'புதிய' அரசர்களுக்குப் பழைய குடிமரபினர் தம்மகளை மணஞ்செய்து கொடுக்க மறுப்பது 'மகள் மறுத்தல்' என்பதாகும்.*

*தமிழ்மரபில் கடத்திவந்து மணப்பது மகட்பாற்காஞ்சி எனப் பாடப்பெற்றுள்ளது. அதனை ஒருகணவமணக்குடும்பத்திற்கு முந்தைய இணைமண உறவின் நீட்சியாகப் பார்க்கலாம் என்கிறார் சிலம்பு. நா. செல்வராசு (2022: 146) காஞ்சித்திணையில் வருகின்ற ஒரே போராக மகட்பாற்காஞ்சி உள்ளது.*

இது முதுகுடியினர் தமது மகளிரைப் புதிதாய்ச் சமூகத்தில் உருவாகி வந்த வேந்தர்கள் மணமுடிக்க நினைப்பதை மறுப்பதைக் காட்டுகிறது. இது ஒருங்கே முதுகுடியினர் மற்றும் வேந்தர்கள் வாழ்ந்திருந்த பண்டைய காலத்தைச் சுட்டுவதாக உள்ளது. அதோடு முதுகுடியினர் வேந்தர்களுக்கு அஞ்சாமல் இருந்தமையும் புலப்படுகிறது. மகளை மறுத்தமையால் போர் ஏற்பட்டுப் பழைய மூதூர்கள் வேந்தர்களால் அழிக்கப்படுகின்றன. முதுகுடிமக்கள் இன்னும் தமது குழுசார் அகமணமுறையினைப் பின்பற்றி வருகின்றனர். புதிதாய் வளர்ந்து வந்த வேந்தர்கள் புறமணமுறையினை நோக்கி நகர்ந்திருக்கின்றனர். இது முதுகுடிமகளை மணக்கவிரும்பி மறுத்தமையால் நிகழ்ந்த போராக மட்டும் காண இயலாது. "பெண் நிமித்தம் போர் நிகழ்ந்தது என்பது துணைக் காரணம். பெண்ணோடு மண்ணையும் ஒருசேரக் கையகப்படுத்தித் தம் குடைக் கீழ் கொண்டு வரவே போர் விளைந்தது என்பதே பொருத்தமாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானில வளத்தையும் கொண்டதாகத் தன்நாடு நிகழ வேண்டும் என்ற பெருமிதவுணர்வு காரணமாக வேந்தர்க்கும் முதுகுடித்தலைவராம் சீறூர் மன்னர்க்கு மிடையே போர் நிகழ்ந்தது" என்கிறார் பொ. நா. கமலா (2017 :94). இதுபோன்றதொரு கருத்தினை வெ. பெருமாள்சாமியும் (2013 :74) கூறுகிறார்.

இதன்படி பெண்ணுடன் மண்ணையும் கொள்ளையிடும் வேந்தர்களின் தனியுடைமை மனநிலைப் புலனாகிறது. மணம் கொடுக்க ஒப்பினால் அதன்வழி அவர்களின் சொத்தினை வேந்தர்கள் பெறுவர். மறுத்தால் அதனைக் காரணமாக வைத்து அவ் ஊர்மேல் போர்ப்புரிந்து அதனைத் தம்வசமாக்குவர். மற்ற துறைகள் போர்களினால் உண்டான விளைவுகளை எடுத்தியம்புவனவாக உள்ளன. போர்களின் வெம்மையினால் உண்டாகும் கொடுமைகளை எடுத்துக்காட்டி அறத்தைப் போதிக்கின்ற காலத்தில் காஞ்சித்திணையில் நிகழ்கின்ற ஒரே போராக மகட்பாற்காஞ்சி உள்ளதனாலே தொல்காப்பியம் பெருந்திணையின் புறனாகக் காஞ்சியைக் குறிப்பிடுகிறது.

### மனைவிமார்கள் இறத்தலைக் குறிக்கும் துறைகளும் ஒருகணவமண அமைப்பும்

'ஆஞ்சிக்காஞ்சி, தலையொடு முடிதல், மூதானந்தம், முதுபாலை, மாலைநிலை' உள்ளிட்ட துறைகள் கணவன் இறந்தவுடன் அவனது மரணத்தைக்கண்ட அவனது மனைவிமார்கள் உயிரைவிடுவது குறித்த துறைகளாக உள்ளன.

இவற்றைக் காணும்போது இவை இனக்குழுப் பொதுமை இழந்து தனிவுடைமைச் சமூகத்தில் தோன்றிய ஒருகணவமணமுறையெனும் (ஃபிரடெரிக் எங்கெல்ஸ், 2011: 95) இலட்சியப்படுத்தப்பட்ட குடும்ப அமைப்பினால் விளைந்த கருத்தாக்கங்களைக் கொண்டுள்ளவையாக உள்ளன. ஆண் முதன்மைச் சமூகத்தில் கணவனை இழந்த பெண்கள் பெரும் கொடிய துன்பங்களுக்கும் கைம்மை உள்ளிட்ட சடங்குகளுக்கும் உள்ளாக்கப்படுவதனால் தாம் வாழ்வதைவிட மரணித்தல் சிறந்ததென எண்ணி உயிர்விடுகின்றனர். இதனைக் கணவன்மேல் கொண்ட அன்பின் காரணமாக செய்வதாகக் கருத இயலாது. தனியுடைமையினால் உண்டான ஒருகணவமணத்தினால் இத்தகைய செயல்முறைகள் நிகழ்வதாகக் கொள்வதே ஏற்புடையது. 'உடன்கட்டை ஏறுதல்', 'கைம்மை' உள்ளிட்ட இந்தியச் சடங்குகளின் அதிகாரநிலைகள் தனியுடைமையினால் ஏற்பட்டவை. வரலாற்று வழியில் பெண்கள் அத்தகைய கருத்தாக்கங்களால் பெரிதும் துன்பமுற்றுள்ளனர். நவீனக்காலத்தில் இவற்றில் பல சீர்த்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

### தாபத நிலையெனும் கைம்மை நோன்பு

கணவன் இறந்தால் தானும் இறந்துவிட வேண்டும் என்கிற நிலைக்கு மாற்றாக இருப்பது கைம்மை நோன்பு. 'தாபதநிலை' எனும் துறை கணவன் இறந்தால் மனைவி கைம்மை நோன்பு நோற்று வாழ்வதுபற்றிய துறையாக உள்ளது. இக்கருத்தாக்கம் சமூகத்தில் தனியுடைமையைப் பாதுகாப்பதற்கான ஓர் ஏற்பாடாகிறது. கணவனது உடைமைப்பொருளாக்கப்பட்ட மனைவி அவனது இறப்பிற்குப்பிறகும் அவனது உடைமையாகவும் அவனது வாரிசுகளை வளர்த்தெடுப்பவளாகவும் இருக்க வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டதன் பின்னணியில் இதனை நோக்க வேண்டும். மறுமணம் என்ற கருத்திற்கே அங்கு இடமில்லை. கணவனது இறப்பிற்குப்பிறகு பாலுணர்வுகளைத் தூண்டுகின்ற அனைத்து வகையான செயற்பாடுகளில் இருந்தும் ஒதுங்கியிருத்தல் வேண்டும். அல்லது உடன்கட்டை ஏற வேண்டும். ஆனால் இதுவே மனைவி இறந்தால் கணவன் இன்னொருவரை மணம் செய்து வாழ்கின்ற நிலை உள்ளது. 'மாலைநிலை'க்குச் சான்றாக உரையாசிரியர்களால் வழங்கப்பட்டுள்ள புறப்பாடல் ஒன்று கைம்மையைவிட உடன்கட்டை ஏறுவது சிறந்ததெனத் தன்கணவனான பூதப்பாண்டியன் இறக்க அவனோடு தீப்பாய விரும்பிய அவனது மனைவி பெருந்தேவியைத் தடுத்தவர்களிடம் உரைத்துத் தீப்பாய்வதைக் காட்டுகிறது (புறநானூறு 246). இப்பாடல் கைம்மையின் துயரத்தைக் காட்டுகிறது.

'தபுதாரநிலை' என்றவொரு துறையானது மனைவியை இழந்த கணவனின் நிலைப்பற்றியதாக உள்ளது. ஆனால் பெண்களைப்போல் ஆண்களும் இறக்க வேண்டும் என்று எந்தப்பதிவுகளும் காணக்கிடைக்கவில்லை. இது ஆண் பெண் ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துகிறது. காஞ்சித்திணை

இவ்வாறு நிலையாமை மற்றும் தனியுடைமையினால் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளான இறத்தல், கைம்மை நோன்பு நோற்றல் உள்ளிட்ட சமூகக் கொடுமைகளை அன்றைய சமூகத்தில் இலட்சியப்படுத்தப்பட்டுள்ளதை வெளிப்படுத்துகிறது.

**தொல்காப்பியப் புறத்திணையியல் பெண்கள்:**

காஞ்சித்திணை முற்றிலும் போர்ச்செயற்களினால் உண்டாகும் அவலங்களைச் சுட்டுவதாக உள்ளது. அளவிற்கு அதிகமான தனியுடைமையின் மீதான விருப்பம், வேந்தனின் அதிகாரத்தால் மனித உயிர்களை அன்றாடம் களத்தில் மரணிக்க வைக்கிறது. போரின் இந்த அவலங்களும், இறந்த வீரர்களின் மனைவிமார்கள் ஒருகணவஅமைப்பினால் தமது உயிரை விடுவதையும் எடுத்துக்காட்டுகிறது. காஞ் சித்திணையின் கட்டமைப்பானது வேந்தச் சமூகமானது இடையறாப் போர்களினால் இயங்கி வந்திருக்கும் இயங்கியலையும், அதனால் ஏற்பட்ட அவலங்களையும் காட்டி நிலையாமையை வலியுறுத்துவதாக உள்ளது. காஞ்சித்திணையின் பெண்பாற் பதிவுகளின் வழியாக இனக்குழுச்சமூகம் சிதைந்த நிலையையும் அதன் எச்சமாகத் ‘தலைப்பெயல் நிலையும்‘, ‘மகட்பாற்காஞ்சியும்‘ தனிவுடைமைச் சமூகம் தோன்றியதன் விளைவினால் பெண்கள் ஆண்களுக்கு அடிமைப்பட்ட நிலையில் அதனைத் தற்காத்துக்கொள்ள உண்டாக்கப்பட்ட ஒருகணவமணமுறையின் கருத்தாக்கங்களாக ஏனைய துறைகளும் அமைந்துள்ளன. இவை தொல்காப்பியக்காலச்சமூகம் தனியுடைமையினால் ஆண்முதன்மைப்பெற்ற சமூகமாகவும் ஆண்கள் அதிகாரமையமான நிலையையும் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

**தொகுப்புரை**

- இக்கட்டுரை அதன் சுருக்கம் கருதி சில கருத்துகளை முன்வைத்துள்ளது. அவை விரிந்த தளத்தில் ஆராயப்பட வேண்டியவை. இக்கட்டுரையின் வழியாகப் பெறப்பட்ட சில முடிவுகள் பின்வருமாறு தொகுத்தளிக்கப்படுகின்றன.
- தொல்காப்பியப் புறத்திணையிலுள்ள ஏழுதிணைகளில் காஞ்சித்திணையில் மட்டும் பெண்பாற்பதிவுகள் காணக்கிடைக்கின்றன.
- காஞ்சித்திணையானது தொடர்ச்சியான போர்களினால் வாழ்வின்மீதான இருத்தலில் ஏற்படும் கேள்விகளினால் உருவான நிலையாமையெனும் கருத்தாக்கத்தினை உணர்த்துவதாக உள்ளது.
- காஞ்சித்திணை இருபது துறைகளைக் கொண்டுள்ளது. அதில் பத்துத்துறைகள் பெண்பாற்பதிவுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பகுத்தால் அவை மூன்று நிலைகளில் அமைந்துள்ளன.
- தலைப்பெயல்நிலைக் காஞ்சியானது தனது மகன் புறமுதுகிட்டு இறந்து விட்டான் என்ற செய்திக்கேட்டுச் சினமுற்றுப் போர்க்களம் சென்ற தாயைக் காட்டுகிறது. இதனைத் தாய்வழிச்சமூகத்தின் எச்சமாகக் கொள்ளலாம்.
- மகட்பாற்காஞ்சி எனும் துறை புதிதாக வளர்ந்து வந்த வேந்தர்கள், முதுகுடியினரின் மகளை மணக்க வேண்ட, அதனை அவர்கள் மறுத்தலின் மூலமாக ஏற்படும் போர்ப்பற்றிய துறையாக உள்ளது. காஞ் சித்திணை துறைகளில் வருகின்ற ஒரே போர் இதுவாகவே உள்ளது. இது இனக்குழுச்சமூகத்தினரான முதுகுடியினரை வேந்தர்கள் அழித்த வரலாற்று நிகழ்வின் இலக்கிய ஆக்கமாக உள்ளது.
- ஏனைய துறைகளான ‘ஆஞ்சிக்காஞ்சி, தலையொடு முடிதல், மூதானந்தம், முதுபாலை, மாலைநிலை’ ஆகியவை இனக்குழுச்சிதைந்து தனியுடைமைச் சமூகத்தில் தோன்றிய ஒருகணவமணக்குடும்பத்தைப் பாதுகாக்கின்ற கருத்தியல்களால் கணவன் இறந்தபிறகு தனக்கு வாழ்வில்லை எனும் சமூக அமைப்பில் தானும் இறந்துவிடும் நிலையினைக் காட்டுவதாக உள்ளன.
- ‘தாபதநிலை’ எனும் துறையானது கணவன் இறந்த பிறகு பெண்கள் கைம்மை நோன்பு மேற்கொள்ளும் நிலை பற்றியதாக உள்ளது.
- தொல்காப்பியக் காஞ்சித்திணையில் உள்ள பெண்பாற்பதிவுகள் இனக்குழுத்தன்மையான தாய்வழிச் சமூகம் சிதைந்து ஆண்கள் தங்கள் கைகளில் குவிந்துள்ள தனிச் சொத்துகளின் வழியாக மேலாதிக்கம் செலுத்துகின்ற ஒருகணவமணக்குடும்ப அமைப்பானது உருவாகி வலுப்பெற்றிருப்பதையும், அத்தகைய ஆண்மையப்பட்ட குடும்ப அமைப்பே இலட்சியப்படுத்தப்பட்ட குடும்ப அமைப்பாக அன்றைய ஆதிக்கவர்க்கம் கருதியிருப்பதனையும் உணர்த்தும் இலக்கியப்பதிவுகளாக உள்ளன.
- பெண்களின் இத்தகைய இரண்டாம் நிலைக்குத் தனிச்சொத்தின் தோற்றமும் அதனால் விளைந்த ஆணாதிக்கமுமே காரணமாக உள்ளதை மார்க்சியம் கண்டுரைத்துள்ளது. இத்தகைய ஆணாதிக்கநிலை ஒழிய தனியுடைமைச் சமூகத்தை வீழ்த்தி நவீனப் பொதுவுடைமைச் சமூகத்தை உருவாக்குவதைத் தமது வழிகாட்டுதலாக மார்க்சியம் வழங்குகிறது.

**துணை நூற்பட்டியல்**


- ஃபிரடெரிக் எங்கெல்ஸ் (மு. ஆ.), குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, இரண்டாம் பதிப்பு – 2011.
- கணேசையர் (பதிப்பு), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பாகம்), முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், இலங்கை, 1948.
- கமலா, பொ. நா., தொல்காப்பியர் முதல் தெரிதா வரை, காவ்யா வெளியீடு, இரண்டாம் பதிப்பு – 2017.
- சாமிநாதையர், உ. வே., (ப. ஆ.), புறநானூறு மூலமும் உரையும், சென்னை லா ஜெர்னல் அச்சுக்கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு –1935.
- சிவலிங்கனார், ஆ., தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல் பகுதி– 2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மீள்பதிப்பு 2025.
- செல்வராசு, நா., சிலம்பு, தொல்காப்பியம் ஒரு பனுவலின் நெடும்பயணம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2022.
- பெருமாள்சாமி, வெ., சங்க இலக்கியக் காட்சிகள் (மார்க்சிய வெளிச்சத்தில்), பாரதி புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு – 2013.